**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2026 - ம் ஆண்டு மார்ச் திங்கள் 06- ம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : ஆர்.கே.மூர்த்தி | அசல் வழக்கு எண்:53/2024 |
| த/ பெயர் | : ராஜேந்திரன் | வாதி தரப்பு சாட்சி எண். 2 |
| வயது | : 34/2026 | |
| கிராமம் | : வாட்டர்பால்ஸ் | |
| வட்டம் | : வால்பாறை | |
| சமயம் | : | |
| தொழில் | :பெட்டிக்கடை | |

**முதல் விசாரணை**

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோட்டை நான் தான் எழுதினேன். அதில் சாட்சி என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை.**

நான் வாதி மாரியப்பன் கேட்டுக்கொண்டதின் படிதான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரிதான். எந்த தேதியில் பிரதிவாதி பணம் வாங்கினார் எந்த தேதியில் புரோநோட்டை எழுதினேன் என்றால் 09-03-2022-ம் தேதி பிரதிவாதி பணம் வாங்கினார் பிரதிவாதி அன்றைய தினமே புரோட்டை எழுதினேன். தமிழ் வருடம் தேதி தெரியுமா என்றால் தெரியவில்லை. புரோநோட்டில் தமிழ்வருடம் எழுதவில்லை என்றால் எழுதவில்லை. புரோநோட்டில் தமிழ்வருடம் எழுதியிருந்தால் அந்த புரோநோட்டு நான் எழுதியது இல்லை என்றால் ஞாபகம் இல்லை. எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.1 லட்சம் கொடுத்தார். எத்தனை ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார் என்றால் ரூ 500/நோட்டாக கொடுத்தார். ரூபாய் 1 லட்சத்து 5 ரூபாய் வட்டி வீதத்தில் ரூ.5000/- எடுத்துக்கொண்டு மீதி தொகை 95,000/-பிரதிவாதியிடம் வாதி கொடுத்துள்ளார்என்றால் இல்லை ரூ.1 லட்சமும் கொடுத்தார். வாதி மாரியப்பன் என்.எம். சுங்கத்தை சேர்ந்தவர் என்பதால் தாவா சம்பவம் அங்கு நிகழ்ந்துள்ளது என்றாலும் வால்பாறையில் நிகழவில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதி மாரியப்பனுக்கு ஏஜென்டாக இருந்து செயல்படுவதால் அவருக்கு சாதமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.